முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1488

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.10.2023,** வியாழக்கிழமை

1. கருணை வடிவான அரங்கனே
   கலியுகத்தைக் காக்கவந்த தேசிகனே
   தர்மத்தை வளர்த்து உலகமெல்லாம்
   தர்மலோகமாக்க உயர் சேவையாற்றுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 09ம் நாள், 26.10.2023, வியாழக்கிழமை)
   வரமென அரங்கன் திருவடி பற்றி
   வையகம் ஞானம் பயின்றால்
3. பேருலகமே ஞான லோகமாகும்
   பிரணவக்குடில் தொடர்புகொண்டு அரங்கன் தர்மத்தை
   வரவேற்று உலகோர் தர்மம் செய்தால்
   வையகமே வறுமையில் நின்று விலகி வளமும் வளர்ச்சியும் காண்கும்
4. காணவே அரங்கன் தொடர்புகூட்டி
   கலியுகத்தில் ஞானசேவையாற்றும் மக்களெல்லாம்
   ஞானவான்களாக ஆறுமுகன் என்னால்
   ஞானிகளாகவே மாற்றம் பெறுவர்
5. மாற்றம் தரவந்த மாதவசி அரங்கன்
   மகத்துவம் உலகோர் அறிந்து வந்தால் போதும்
   ஆற்றல்பெருகி இந்த பேருலகம்
   அழியாமை எனும் மகாசக்தி கண்டு
6. உற்றதொரு ஞானிகள் படை நிறைந்த
   உயர்வான ஞான ஆட்சிக்காலமாகவும் சக்திமாற்றங்காணும்
   காணவே அரங்கன் தொடர்பு கூட்ட
   கலியுகத்தில் மாற்றம் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—